திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தைப் பொறுத்தவரையில் பென்சிலின் தொழிற்சாலை அமைப்பதற்கான, சாதகமான சூழ்நிலை உள்ள இடம். தண்ணீர் வசதி, இடவசதி, இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற பொதிகைமலைத் தென்றல் காற்றுடன் எல்லா மூலிகைகளும் உள்ள மலைப்பிரதேசமாக இருக்கின்ற காரணத்தால்-மத்திய அமைச்சர் சொன்ன கருத்து தவறானதா என்று தெரியவில்லை-தமிழக அரசாங்கம் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னபடி அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் இந்தத் துறையிலே இல்லை. ஆனால் தொழில் துறையிலே ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள தனிக் கேள்வி போட்டுத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் துறையைப் பொறுத்தவரை அப்படி திட்டம் எதுவும் இல்லை. நாம் ஒரு தொழிலைத் துவங்க வேண்டுமானால் அது சிரமமான காரியம். அதைப் பார்த்துக் கொண்டிருந்தால், இந்தத் துறையின் மற்ற வேலைகள் கெட்டுவிடும் என்ற காரணத்தால், அதைச் செய்வதற்கு இந்தத் துறை தயாராக இல்லை. எனவே, தொழில் துறையின் மூலமாக இதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. எம்.கே. பாலன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

106—

சிறுவர் பூங்காவில் நவீன விளையாட்டுச் சாதனங்கள் அமைத்தல்

***19787-**திரு. எம். கே. பாலன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கிண்டி, காந்திமண்டபம் சிறுவர் பூங்காவில் நவீன விளையாட்டுச் சாதனங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் சிறுவர் பூங்காவில் நவீன விளையாட்டு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போதுமான எண்ணிக்கையில் பலவித விளையாட்டுச் சாதனங்கள் தற்போது உள்ளன.

திரு. எம். கே. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டி சிறுவர் பூங்காவில் குழந்தைகளை மகிழ்விக்க, ஜப்பானில் உள்ள டிஸ்னி லேண்டைப் போல, டோரா டோரா, ஜியண்டி வீல், டிராஜன், கப் அண்டு சாசர், மினி இரயில் போன்றவற்றை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வசூலிக்கப்படுகின்ற தொகை குழந்தைகளுக்கு 25 பைசா, பெரியவர்களுக்கு ஒரு ரூபாய் என்று வசூலிக்கப்படுகிறது. ஜப்பானைப்போல், மேலை நாடுகளைப்போல் நாம் வசூலிக்க வேண்டுமென்றால், அதற்கு நூற்றுக் கணக்கான ரூபாய் வசூலிக்க வேண்டும். ஆகவே, மக்களிடத்திலே தவறான கருத்து வரும். எனவே, அந்தக் கருத்துருவை அரசு பரிசீலிக்க இயலாது.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கிண்டிக்குப் பக்கத்திலுள்ள கோல்டன் பீச் என்கிற தனி நிறுவனம் சாதாரண ராட்டணத்தைப் போட்டு 25 ரூபாய் வசூல் செய்கிறார்கள். கிண்டிப் பூங்காவிற்கு இலட்சக் கணக்கான குழந்தைகள் தினந்தோறும் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளுக்கு 25 பைசா, பெரியவர்களுக்கு ஒரு ரூபாய் வசூல் செய்கிறார்கள். சாதாரண 10 ரூபாய் வசூல் என்பது பெரிய வசூல் இல்லை, இந்த காலக்கட்டத்தில். அதுவும், கிண்டியிலுள்ள இடப்பரப்பளவு மிகவும் வசதியாக உள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கர் இடம் உள்ளது. மிக அடர்த்தியான மரமும், பல வனவிலங்குகளும் உள்ள இடமாக இருக்கிற காரணத்தால், தினந்தோறும் வெளிநாடுகளிலிருந்து காந்தி மண்டபத்தைப் பார்க்க இலட்சக்கணக்கான பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஜப்பானைப் போல் இல்லையென்றாலும்கூட, சாதாரண ஜெயிண்ட் வீல், டிராகன், கப் அண்டு சாசர், மினி இரயில் போன்றவற்றை வைத்து 10 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரை வசூல் செய்தால் அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அரசு அந்தத் திட்டத்தை அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், சிறுவர்களுக்கு வேண்டிய அளவுக்கு விளையாட்டுச் சாதனங்கள் இருக்கின்றன என்று, அது தவறான கருத்து. ஏனென்று சொன்னால், அங்கே டப்பா போன்ற, 20 வருடத்திற்கு முன்பு வைத்த விளையாட்டுச் சாதனங்கள்தான் இருக்கின்றன. அதுகூட, ஓட்டை உடைசலாக இருக்கின்றது. அமைச்சர் அவர்கள் ஒரு தடவை அங்கே சென்று பார்வையிட்டு அதை நவீனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள சிறுவர் பூங்காவில் தேவையான, சிறுவர்களுக்குத் தேவையான விளையாட்டுப் பொருள்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. விளையாடுவதற்கும் அங்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். அது தவறு. பழுது ஏற்பட்டால் உடனடியாக அந்தப் பழுதைப் பார்த்து நிவாரணப் பணிகள் செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார், தனியார் போல் நாம் ஏன் வாங்கக் கூடாது என்று. தனியார் வேறு, அரசு வேறு. அரசு ஒரு நிதியைத் திரட்டுகிறபோது, எவ்வளவு எதிர்ப்புகள் வருகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, சிறுவர்களுக்கு 25 பைசா வாங்கிக் கொண்டிருக்கிறோம், பெரியவர்களுக்கு ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இதை மாற்றி அமைக்கின்ற வகையில் இன்னும் சில நவீன விளையாட்டுச் சாதனங்களை அங்கே குழந்தைகளுக்காக வைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட நம்முடைய முதல்வர் அவர்களுடைய கருணையால் ஜப்பானுக்குச் சென்று, அந்த டிஸ்னி லேண்டுக்குச் சென்று அந்த இடங்களைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு பெற்ற ஒருவன் என்ற முறையிலே சொல்கிறேன், ஜப்பானிலே இதுபோன்ற விளையாட்டு அரங்குகளுக்குச் செல்கிறபோது, யார் விரும்புகிறார்களோ அவர்கள் மட்டும் அதற்குரிய நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி அந்த விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். அதுபோல அங்கே இருக்கின்ற விளையாட்டுகள் எல்லாம் அறிவை வளர்க்கக்கூடிய விளையாட்டாக இருக்கின்றன. It improves the I.Q. of the children அதுபோல இங்கேயும் ஏற்பாடு செய்து We will leave the choice to the parents and to the children. அதேபோல யார் விரும்புகிறார்களோ அவர்கள் அந்த விளையாட்டிலே ஈடுபடுவதற்கான உரிய கட்டணத்தைச் செலுத்தி விளையாடுவதற்குரிய வகையில் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவு வளர்ச்சிக்காக விளையாட்டுத் துறையிலே பல்வேறு மாற்றங்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், கல்வித் துறையிலே தனியான கேள்வி போட்டு, பதில் பெற்றுக்கொள்ளலாம். இருக்கின்ற பகுதிக்கு ஏற்ப அந்தச் சிறுவர்கள் விளையாடுவதற்கான

ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் நவீனமாகச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோடைக்கால விடுமுறை, இந்தச் சட்டமன்ற நாட்களிலேதான் வருகின்றது. எங்களுடைய குழந்தைகளை எல்லாம் கூட்டிவந்து, திரும்பத் திரும்ப, இந்தக் கிண்டியிலே இருக்கின்ற காந்தி மண்டபம், சிறுவர் பூங்காவையே காண்பித்து அந்தக் குழந்தைகளுக்கும் அது புளித்துவிட்டது. பாரிசிலே உள்ள டிஸ்னி லேண்டை பல நாட்கள் பார்த்தால்தான் முழுவதும் பார்க்க முடியும் என்று சொல்கிறார்கள். நாங்களும் பார்த்தோம். அப்படிப்பட்ட ஒரு டிஸ்னி லேண்டை இங்கே ஏற்படுத்தினால் இந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர் ஆகிறவரை காண்பித்துக் கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு பூங்காவை இங்கே அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கோவை மாநகரைத் தேர்வு செய்து அவர்களுடைய தாயின் பெயரால் இன்றைக்கு சிறப்பான முறையில் மக்கள் என்னென்ன விரும்புகிறார்களோ அதற்கேற்றபடி விளையாட்டு மைதானம் அமைக்கின்ற நடவடிக்கைகளை சமூக நலத் துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 107, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

107—

போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது அபராதம் விதித்தல்

***21731**-*திரு. ஓ. எஸ். அமர்நாத்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் காலை எட்டு மணிக்கு பின்னர் நுழையும் லாரி போன்ற வாகனங்களுக்குப் போக்குவரத்துக் காவலர்களால் அவ்விடத்திலேயே அபராதம் விதிக்கும் முறையை அமலுக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?